DINAKARAN

4 NOV 2022

PAGE 15

### புதுச்சேரி பல்கலைக்கழகத்தில்

# உலக அளவில் விஞ்ஞானிகளின் எண்ணிக்கை 2 மடங்கு உயர்வு

புதுச்சேரி, நவ. 4: புதுச்சேரியில் பல்கலைக்கழக துணைபதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது, உலக அளவிலான விஞ்ஞானிகளின் எண்ணிக்கையில் புதுச்சேரி பல்கலைக்கழக விஞ்ஞானிகளின் எண்ணிக்கை 2 சதவீதம் உயர்ந்துள்ளது. உலக அளவில் தலைச்சிறந்த விஞ்ஞானிகளை உருவாக்கும் முயற்சியில், புதுச்சேரி பல்கலைக்கழகம் 2 சதவீதம் விஞ்ஞானிகளை உருவாக்கி சாதனையை படைத்துள்ளது.

உலகின் மிகப்பெரிய அறிவியல் சார்ந்த புத்தகங்கள் மற்றும் ஆராய்ச்சி பத்திரிகைகளை வெளியிடும் எல்சேவியர் பதிப்பகத்தால் சமீபத்தில் வெளியிடப்பட்ட ஸ்டான்போர்டு பட்டியலில் இந்த சாதனை குறித்த செய்தி இடம் பெற்றுள்ளது. 1996ம் ஆண்டு முதல் தற்போது வரையிலான காலகட்டத்தை உள்ளடக்கிய, அவரவர் துறை சார்ந்த சாதனைகளின் பட்டியலில், இந்த ஆண்டு மட்டும் புதுச்சேரி பல்கலைக் கழகத்தைச் சார்ந்த 11 விஞ்ஞானிகளின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

உலக அளவில் விஞ்ஞானிகளை உருவாக்கும் விகிதத்தில் இது கடந்த ஆண்டை விட 25 சதவீதம் அதிகமாகும். மேலும், புதுச்சேரி பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங் சிறப்பான தலைமை மற்றும் சீரிய முயற்சியினால் கிடைத்த ஒருங்கிணைந்த முன்னேற்றத்தையும் முந்தைய 12 மாத செயல் திறனின் அடிப்படையில் விஞ்ஞானிகளை வரிசைப்படுத்தும் மற்றொரு பட்டியலையும் எல்சேவியர் பதிப்பகத்தார் வெளியிட்டுள்ளனர்.

இந்த வெளியீட்டில், புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் முன்னேற்றமானது மிகவும் அபரிமிதமாக உள்ளது. அதாவது கடந்த ஆண்டு 11 விஞ்ஞானிகளுடன் இருந்த புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் பட்டியல் இந்த ஆண்டு 17 ஆக அதிகரித்துள்ளது. இவ்விரு பட்டியலிலும் சுற்றுச்சூழல், ஆற்றல் மற்றும் செயல்முறை பாதுகாப்பு துறை பேராசிரியர் அப்பாசி, பேராசிரியர்கள் ராமசாமி, முருகன், பொற்செழியன், வடிவேல், முருகன், சுப்பிரமணியன், பௌமிக், தஸ்னீம் அப்பாசி மற்றும் கண்ணன் ஆகியோரின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. அமெரிக்காவின் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தின் நிபுணர்கள் குழுவின் உதவியுடன் 2019ம் ஆண்டிலிருந்து எல்சேவியர் பதிப்பகத்தால் உலகளவில் தலைசிறந்த 2 சதவீதம் விஞ்ஞானிகளை தரவரிசைப்படுத்தும் முறை தொடங்கப்பட்டது. உலகளவில் விஞ்ஞானிகளை தரவரிசைப்படுத்தும் இந்த முறையில் கடந்த 2020ம் ஆண்டிலும், இந்த ஆண்டிலும் மேம்படுத்தப்பட்டுள்ள மாற்றங்களும், செயல்முறைகளும், தலைசிறந்த விஞ்ஞானிகளை தேர்ந்தெடுக்கும் விதத்தினை மேம்படுத்தியுள்ளது. எல்சேவியர் பதிப்பகத்தால் தற்போது வெளியிடப்பட்டுள்ள இந்த ஸ்டான்போர்டு பட்டியல் உலக அளவில் அறிவியல் தகுதியைப் பிரதிபலிக்கும் நம்பகத்தன்மை வாய்ந்த தரவரிசைப் பட்டியலில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இவ்வாறு கூறப்பட்டிருந்தது.